## வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் –2012/2018

---

வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தின் 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2012 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிலிருந்து 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான தவறான கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

### 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் வரைபு ஆண்டறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிலிருந்து 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த 6 ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை இவ்வறிக்கைத் திகதி வரையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 2011 மார்ச் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிலைமை

கூட்டுத்தாபனத்தினால் கடைசியாகத் தயாரிக்கப்பட்ட 2011 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| **சொத்துக்கள்** | **தொகை** |
|---|---|
| | ரூபா |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 91,269,967 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 832,852,873 |
| மொத்த சொத்துக்கள் | 924,122,840 |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 45,828,677 |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 929,570,102 |
| மொத்த பொறுப்புக்கள் | 975,398,779 |
| தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனம் | (51,275,939) |
| மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள் | 924,122,840 |
| மொத்த வருமானம் | 75,166,023 |
| மொத்த செலவுகள் | 77,894,846 |
| பற்றாக்குறை | (2,728,823) |

### 2.2.1 ஏனைய விடயங்கள்

2003 / 2004 கணக்காண்டிலிருந்து 2010 / 2011 கணக்காண்டு வரையான 08 ஆண்டுகளின் கணக்குகள் தனியார் கணக்காய்வுக் கம்பனியால் கணக்காய்வு செய்த கணக்காய்வுகளுக்கான சான்றுகள் இல்லாமையின் அடிப்படையில் கணக்காய்வு அபிப்பிராயம் தெரிவிப்பது மறுக்கப்பட்டுள்ளது.

### 2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 யூலை 01 ஆந் திகதிய பீஈ/ஜிஓசீஓ/டிஆர் 9 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட கடிததத்தின் பிரகாரம் வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்திற்கு தகுதிவாய்ந்த அதிகாரி ஒரு ஆண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தும் 2018 ஆம் ஆண்டு வரை நியமனம் நீடிக்கப்படாது தகுதிவாய்ந்த அதிகாரியாகச் செயற்பட்டிருந்தார். மேலும் தகுதிவாய்ந்த அதிகாரியால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக எழுத்து மூலம் கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 மார்ச் 31 இல் உள்ளவாறு நீண்ட கால முதலீடுகளின் கீழ் ரூபா 52 மில்லியன் வரையறுத்த இலங்கை உற்பத்திகள் ஏற்றுமதி கூட்டுத்தாபனத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் நிகழ்கால நிலமை தொடர்பான தகவல்கள் காணப்படவில்லை.

(இ) 2011 மார்ச் 31 இல் உள்ளவாறு தொடர்புபட்ட தரப்பினர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 764,957,506 கூட்டு மொத்தமான மற்றும் ரூபா 56,133,035 கூட்டுமொத்தமான வணிக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் சம்பந்தமான

பேரேட்டு மீதிகள் தொடர்பாக துணைப் பதிவேடுகளும் காலப் பகுப்பாய்வும் மற்றும் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு அம் மீதிகளிலிருந்து அறவிட வேண்டிய மீதி தொடர்பான துணைப் பதிவேடு மற்றும் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 17,357,133 கிரயமான வாகனங்களும் ரூபா 23,530,433 கிரயமான இயந்திரங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு முதலீட்டாளருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தும் மதிப்பீட்டு அறிக்கையும் பணம் பெற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்தும் அறிக்கையும் கணக்காய்விற்கு கிடைக்கவில்லை.

(உ) 2011 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 1,283,471 காசு மீதி ரூபா 3,037,306 நிலையான வைப்பு பணம் மற்றும் வாகனங்களையும் இயந்திரங்களையும் விற்றுப் பெற்ற பணம் என்பவற்றை செலவு செய்த விதத்தைக் காட்டும் உறுதிப்படுத்தல் அறிக்கை கணக்காய்விற்கு கிடைக்கவில்லை.

(ஊ) காணிகளைப் பிணையாக வைத்து நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 901,610,000 நீண்ட காலக் கடன் ரூபா 17,185,562 வங்கி மேலதிகப் பற்று மற்றும் அந்த மீதிகளின் நிகழ்கால நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(எ) 2011 மார்ச் 31 இல் உள்ளவாறு வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய ரூபா 10,768,203 மீதியையும் நிலையான சொத்துக்களை அகற்றுதல் அடிப்படையில் இனங்காணப்படாத ரூபா 17,874,912 மீதியையும் உறுதிப்படுத்துவதற்கான விபரம் மற்றும் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

2010 ஏப்ரல் 30 ஆந் திகதிய 1651/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்திகள் மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனம் அரசாங்க வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்தும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 06 தொழிற்சாலைகளில் 04 தொழிற்சாலைகள் அரசாங்க வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தின் மூலம் தனியார் துறைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் சில்வடெல் தொழிற்சாலை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டது. எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் அது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, எல்பிடிய தொழிற்சாலை 10 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டது.

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவனெல்லை பொருட்களை பிரித்தெடுக்கும் தொழிற்சாலையை ரூபா 439,898 மாதாந்த குத்தகைக்கு 2012 மார்ச் 14 ஆந் திகதியிலிருந்து 2042 மார்ச் 14 ஆந் திகதி வரை 30 ஆண்டுகளுக்கும் மாவனெல்லை டயர் டியூப் தொழிற்சாலையை ரூபா 123,333 மாதாந்த குத்தகைக்கு 2012 மார்ச் 14 ஆந் திகதியிலிருந்து 2042 மார்ச் 14 ஆந் திகதி வரை 30 ஆண்டுகளுக்கும் பதுரலிய கிரேப் இறப்பர் தொழிற்சாலையை ரூபா 39,500 மாதாந்த குத்தகைக்கு 2012 மார்ச் 14 ஆந் திகதியிலிருந்து 2042 மார்ச் 13 ஆந் திகதி வரை 30 ஆண்டுகளுக்கும் குத்தகை வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறே வஹரக கிரேப் இறப்பர் தொழிற்சாலையை 2011 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து 2016 சனவரி 31 ஆந் திகதி வரை 15 ஆண்டுகளுக்காக ரூபா 28,125 மாதாந்த குத்தகைக்கும் 2016 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து 2021 சனவரி 31 ஆந் திகதி வரை ரூபா 42,187 தொகைக்கும் 2021 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து 2026 சனவரி 31 ஆந் திகதி வரை ரூபா 63,281 தொகைக்கமாக உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. இதற்கிணங்க 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை 03 தொழிற்சாலைகளிலிருந்து அறவிடப்பட்ட குத்தகை உடன்படிக்கையின்

பிரகாரம் அரசாங்க வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தினால் அறவிடப்பட்டிருந்தற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த மூன்று தொழிற்சாலைகளிலிருந்து 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,003,130 பணம் அறவிடப்பட வேண்டியிருந்ததாக அரசாங்க வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி செயலாளரின் MCED/1A-03/AQAG/SRMC ஆம் இலக்க 2017 ஒக்தோபர் 24 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2010 யூன் 23 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவை நியமித்த நிரந்தர மீளாய்வுக் குழுவின் மேற்பார்வையின் கீழ் மற்றும் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் தொழில்நுட்ப வழிகாட்டல்களின் பேரில் தனியார் துறையிலுள்ள முதலீட்டாளர்களிடமிருந்து விருப்பக் கூற்றுக்கள் கோரி பொருத்தமான முதலீட்டாளர்களைத் தெரிவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க 2011 மார்ச் 05 ஆந் திகதி பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், விருப்பக் கூற்றை கோரி பொருத்தமான ஒரு முதலீட்டாளரைத் தெரிவு செய்வதற்கு முன்னர் 2011 பெப்ரவரி 14 ஆந் திகதி வரை 06 ஏக்கர் 07 பேச்சஸ் காணிகள் மற்றும் கட்டிடங்களுடனான வஹரக தொழிற்சாலை தனியார் தரப்பினர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) மேற்கூறிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளின் குத்தகைகள் அரசாங்க வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டியதாக இருந்த போதிலும் 15 ஆண்டுகளுக்கு ரூபா 08 மில்லியனுக்கு அதாவது முதல் ஆண்டு 05 ஆண்டுகளுக்கு ஒரு மாதத்திற்கு ரூபா 28,125 வீதம் ரூபா 1,687,500 மொத்த தொகையும் இரண்டாவது 05 ஆண்டுகளிலிருந்து ஒரு மாதத்திற்கு ரூபா 42,187 வீதம் ரூபா 2,531,220 மொத்த தொகையும் மூன்றாவது ஆண்டிற்காக ரூபா 63,281 வீதம் ரூபா 3,796,860 தொகைக்கு குத்தகைக்கு வழங்கிய வஹர தொழிற்சாலையின் குத்தகை வாடகை வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டியதாக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எல்பிடிய போம் இறப்பர் தொழிற்சாலை மற்றும் அத்தொழிற்சாலையில் இருந்த சொத்துக்கள் எதுவும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் மூடப்பட்டிருந்ததுடன் 2015 செப்தெம்பர் 21 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானியின் மூலம் கூட்டுத்தாபனம் பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் அத்தொழிற்சாலை அமைந்திருந்த 06 ஏக்கர் 03 ரூட் 24.3 பேச்சஸ் காணி, 200 அடி நீளம் 75 அடி அகலமான கட்டிடம் மற்றும் 03 உத்தியோகபூர்வ இல்லங்கள் கணக்காய்வு அறிக்கைத் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டன.

(உ) எம்பிடிய போம் இறப்பர் தொழிற்சாலையில் இடம்பெற்ற ரூபா 500 மில்லியனுக்கு அண்மித்த அரசாங்க நிதி முறைகேடு தொடர்பாக இலஞ்சம் மற்றும் ஊழல் திணைக்களத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் நிகழ்கால நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1 முறைப்படி ஒப்படைக்கப்படாத காணிகள்

எல்பிடிய போம் இறப்பர் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்ட 06 ஏக்கர் 03 ரூட் 24.3 பேச்சஸ் காணிகளின் உரிமை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமானதாகக் காணப்பட்டதுடன் அக் காணியின் உரிமையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்**

காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான தொடங்கொட சில்வடெல்ஹியில் 05 ஏக்கர் காணி அச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அக்காணியில் கூட்டுத்தாபனத்தால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் 2012 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிலிருந்து 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு வரையான 07 ஆண்டுகள் காலத்திற்கான நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 சுற்றாடல் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுதல்.**

எல்பிடிய போம் இறப்பர் தொழிற்சாலை வளவில் நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கிகள் மற்றும் கட்டிடங்களின் மழை நீர் வழிந்தோடிகளில் ஹபரல போன்ற புதர்களுடனான காடுகள் வளர்ந்திருந்ததன் காரணமாக டெங்கு நுளம்புகள் வளரும் இடமாக மாறியுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது.